Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 05

வியாழக்கிழமை 01 டிசெம்பர் 2022

கார்த்திகை 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# அரசியலில் இருந்து இனி ஒதுங்கவேண்டும் மஹிந்த!

## மொட்டுக்குள் வலுக்கிறது எதிர்ப்பு

**கொழும்பு, டிசெம்பர் 1**

**ஸ்ரீலங்கா பெரமுன கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளிவரும் நிலையில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டுமென்ற கருத்து அந்தக் கட்சிக்குள் இருந்து எழ ஆரம்பித்திருக்கின்றது. ராஜபக்ச குடும்பத்தினரிடையே ஏற்பட்டுள்ள மோதல்களே இதற்குக் காரணம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.**

»11



## உடையார்கட்டில் மீட்கப்பட்ட எலும்பு எச்சங்களுடன் 'தகடு'

முல்லைத்தீவு, டிசெ.1

புதுக்குடியிருப்பு, உடையார்கட்டில் உள்ள குரவில் பிரதேசத்தில் மனித உடல் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. மூவரின் உடல் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுடையது என்று நம்பப்படுகின்றது.

கடந்த 22ஆம் திகதி தனியார் ஒருவரின் காணியைத் துப்புரவாக்கும்போது மனித

»09

## உதவாத அமைச்சர்களுக்கு பெரமுனவினர் உபத்திரவம்

கொழும்பு, டிசெ.1

தற்போது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மூன்று அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் திட்டம் தீட்டப்படுகின்றது என்று அறிய முடிகின்றது.

அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ச, நிமால் சிறிபால டி சில்வா, நஸீர் அஹமட்

»09

## மாவட்ட அபிவிருத்திச்சபை செய்தியில் உண்மையில்லை

### மறுக்கிறது ஜனாதிபதி ஊடகப் பிரிவு

கொழும்பு, டிசெ.1

மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச்சபைகளைஅமைக்க ஜனாதிபதி தயாராகி வருகின்றார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

»09

## பேரம் பேசல் மும்முரம் தாவல்கள் நடக்கலாம்!

### இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெ.1

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பலர் தொடர்ச்சியாகப் பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் எப்போது அவருடன் இணைந்து கொள்வார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

»10

## கோத்தாவைக் கொல்லச் சதி; தீட்டப்பட்டிருந்தது உண்மையே!

### மீண்டும் விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.1

ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்து கோத்தாபய ராஜபக்சவைக் கொல்வதற்கான ஒரு சதித்திட்டம் இருந்தது உண்மை. பாதுகாப்பு அதிகாரிகளே அந்தத் திட்டத்தை வகுத்திருந்தார்கள். ஜனாதிபதி மாளிகையில் கடந்த ஜூன்

»11

## நல்லாட்சி காலத்து நாடகம் அம்பலம்!!

### மாவட்டசபை தொடர்பான மைத்திரி – ரணில் கூட்டுத் தொடர்பில் சரவணபவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 1

நல்லாட்சி அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு முயற்சியில் அப்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவும், அன்றைய பிரதமர் ரணில்

»11

## அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மின்கட்டணம் மீள உயரும்!

கொழும்பு, டிசெ.1

2023 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் இரு படிநிலைகளின் கீழ் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

»11

## அரசின் முட்டாள்தனத்தால் குடும்ப ஆரோக்கியம் அழிவு

### ஹிரிணி அமரசூரிய எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.1

அரசாங்கம் தூரநோக்கற்று எடுத்த முட்டாள்தனமான தீர்மானங்களால் நாட்டின் விவசாயத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதாரப் பாதிப்பு குடும்பங்களின் ஆரோக்கியத்தை முழுமையாக இல்லாதொழித்துள்ளது. சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள அடிப்படைப் பிரச்சினைக்கு வரவு-செலவுத் திட்டத்தில் எந்தத் தீர்வும் இல்லை.

-இவ்வாறு மக்கள்

»09

## ஆடைச் சுற்றறிக்கை உடனடியாக இரத்து!

யாழ்ப்பாணம், டிசெ.1

நிர்வாக தர அதிகாரிகளின் உத்தியோகபூர்வ ஆடை தொடர்பான சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக் காலத்தில் வசதியான ஆடைகளுடன்

»11

### வடக்கு மாகாணத்தில் இந்தவருடம்

## எச்.ஐ.வி. தொற்றுடன் நால்வர் அடையாளம்

யாழ்ப்பாணம், டிசெ.1

வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு 4 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எச்.ஐ.வி. தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

»11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## திட்டமிடப்படாத திண்மக்கழிவு வெளியேற்றம்

# மாநகரசபைக்கு எதிராக கல்லுண்டாயில் போராட்டம்

### வலி. தென்மேற்கு பிரதேசசபை முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணம் மாநகரசபையால் திட்டமிடப்படாத வகையில் திண்மக் கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன என்றும், இந்தத் திண்மக்கழிவு வெளியேற்றத்தை உரிய முறையில் மேற்கொள்ளப்படாதவிடத்து அவற்றை தம்மிடம் ஒப்படைக்குமாறு வலியுறுத்தியும் வலி. தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள், மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையினர் திட்டமிடப் படாத வகையில் வலி தென்மேற்குப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கல்லுண்டாய் வெளிப்பகுதியில் கழி வகற்றலை மேற்கொள் கின்றனர்.

இதனால், சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றன.

அத்துடன் நீதிமன்றத் தின் அறிவுறுத்தல்களை யும் மீறி கழிவகற்றலை யாழ். மாநகரசபையினர் மேற்கொள்கின்றனர்.

கட்டாக்காலி நாய்கள் இந்தப் பகுதிகளில் மாநகரசபையினரால் கொண்டுவந்து விடப்படு கின்றன என்ற குற்றச் சாட்டுக்களை போராட் டத்தில் ஈடுபட்ட மக்கள் முன்வைத்தனர்.

அத்துடன், மாநகரசபை யினரால் திண்மக்கழிவு களை உரியமுறையில் அகற்ற முடியாதுவிடின் அவற்றை எம்மிடம் ஒப் படைத்தால் நாம் உர மாக்குவோம் என்று வலி. தென்மேற்கு பிர தேசசபையின் தவிசாளர் ஜெபநேசன் தெரிவித் தார்.

இந்தப் போராட்டம் தொடர்பிலும், அதில் முன்வைக்கப்பட்ட குற் றச்சாட்டுகள் தொடர்பி லும் யாழ். மாநகரசபை யின் ஆணையாளரைத் தொடர்புகொண்டு கேட்ட போது,

எமக்கு வலி.தென் மேற்குப் பிரதேசசபையி டம் இருந்து திண்மக்க ழிவுகள் சேதன உறபத் திக்கு தேவைப்படுவதாக கோரிக்கை கடிதம் முன் வைக்கப்பட்டது.

இருப்பினும் எங்களு டைய தேவைக்கு அதி கமாக வருகின்றதையே எம்மால் கொடுக்க முடி யும். அத்துடன், இந்தப் போராட்டம் தொடர்பில் எமக்கு எதுவும் தெரிவிக் கப்படவில்லை.

போராட்டத்தில் முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டுக் களைப் போன்று நாம் நீதிமன்ற உத்தரவை மீறிய வகையில் கழிவ கற்றலை முன்னெடுக் கவில்லை. அத்துடன் கட்டாக்காலி நாய்களை நாம் அந்தப் பகுதியில் கொண்டுசென்று விடவு மில்லை - என்றார்.

(ம-125)

## மருந்து தட்டுப்பாடு என்பது வதந்தியே!

### சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 1

நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக் கான தட்டுப்பாடு தற்போது நிவர்த்தி செய் யப்பட்டுள்ளது.

மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தொடர்ந்து வெளிவரும் வதந்திகளை ஏற்றுக்கொள்ளமுடியாது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரி வித்துள்ளார்.

சுகாதார அமைச்சுசார் ஆலோசனைக் குழு அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே அவர் இதனை குறிப் பிட்டார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப் பப்பட்ட ஊடக அறிக்கையில் உள்ளதா வது:

நாட்டில் தற்போதும் மருந்துத் தட்டுப் பாடு நிலவுவதாக வெளியாகும் செய்திகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

அத்தியாவசியமான 14 மருந்துகளின் விநி யோகத்தை உறுதிப்படுத்துவதற்காக சீனா வால் நன்கொடையாக வழங்கப்பட்ட 28 மில்லியன் அமெரிக்க டொலர் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறையின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்தியக் கடன் உதவியின் கீழ் கிடைக்கப்பெற்ற 200 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 200 மில்லியன் அமெரிக்க டொல ருக்கு மேலதிகமாக இந்தியாவிலிருந்து கிடைத்த ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியில் எஞ்சியுள்ள 35 மில்லியன் அமெரிக்க டொலரும் சுகாதா ரத்துறைக்கே ஒதுக்க அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

மருந்துத் தட்டுப்பாடு இனி நாட்டில் ஏற் பட வாய்ப்பில்லை என சுகாதார அமைச் சர் தெரிவித்தார். (ச-இ)

## திருடப்பட்ட சைக்கிள் மீட்பு

திருடப்பட்ட சைக்கிள் உதிரிப்பாகங்கள் கள வாடப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை மீட்கப் பட்டுள்ளது என பளை பொலிஸார் தெரிவித் தனர்.

பளை இந்திராபுரத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாணவி ஒருவ ரின் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது என பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டது. இந்த நிலையில் குறித்த சைக்கிள் உதி ரிப்பாகங்கள் திருடப்பட்ட நிலையில் அதேயிடத் தில் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரி வித்தனர். திருட்டில் ஈடு பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெ டுத்துள்ளனர். (ச-9)

## பாடசாலைகளின் பௌதீக வளம் நாட்டின் வளர்ச்சிக்கு உபயோகம்

### தேசிய பேரவை உபகுழு தலைவர் சம்பிக்க ரணவக்க ஆலோசனை

கொழும்பு, டிசெ. 1

உணவு உற்பத்தி, மின்சார உற்பத்தி போன்றவற்றின் மூலம் நாட்டின் பொரு ளாதாரத்தை மேம்படுத்த பங்களிக்கும் வகையில் பாடசாலைகளின் பௌதீக வளங்களைத் திறம்பட பயன்படுத்துவது குறித்து பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான தேசியபேரவை உபகுழுவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர் பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையா ளம் காணல் பற்றிய தேசியபேரவையின் உப குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப் பப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:

பாடசாலை மாணவர்களுக்குக் காணப்ப டும் ஊட்டச்சத்து மற்றும் போக்குவரத்துப் பிரச்சினை, பொருளாதார அபிவிருத்தி யில் பாடசாலைகளைப் பயன்படுத்துவ தற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராயும் நோக்கில் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரதிநிதிகள், கல்வி அமைச்சு, திறைசேரி ஆகியவற்றின் பிரதிநிதிகள் உபகுழு பங்கேற்றனர்.

இதன்போது பாடசாலைகளுக்குச் சொந் தமான வெற்றுக்காணிகளில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு தெளிவூட்டல் கிடைக்கப்பெறுவதுடன் நாட்டின் வளர்ச் சிக்கும் வழிவகுக்கும்.

மேலும், பாடசாலைகளின் கூரைகளை பயன்படுத்தி சூரியப்படலங்களைப் பொருத்தி அதன் ஊடாக மின்சார உற் பத்தியை மேம்படுத்த முடியும்.

பாடசாலைகளின் மின் பாவனைகளை கண்காணிக்க எரிசக்தி முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.

இதற்கென நாடு முழுவதிலுமுள்ள பாட சாலைகளில் கட்டடங்கள் தவிர்ந்த அவற் றுக்குச் சொந்தமான காணிகள் குறித்த கணக்கெடுப்பொன்றை நடத்தி அதன் தகவல்களை வழங்குமாறு உபகுழு கல்வி அமைச்சுக்குப் பணிப்புரையும் விடுத்தது - என்றுள்ளது. (ச-இ)

### ஆளுநரின் அனுமதி கிடைக்காததால்

## நலத்திட்டங்கள் மக்களை சென்றடைவதில் தாமதம்

சாவகச்சேரி, டிசெ. 1

மாகாண ஆளுநரின் அனுமதி காலதாமதமடை வதால் உரியகாலத்தில் தீர்மானங்களை நிறை வேற்ற முடியாதுள்ளது என சாவகச்சேரி நகரசபை யின் உத்தேச பாதீட்டு அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் 2023ஆம் ஆண்டு உத்தேச பாதீட்டு அமர்வு நேற்று சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த வருட பாதீட்டில் சபை எல்லைக் குட்பட்ட கர்ப்பிணிகளுக்கு போஷாக்கு உணவுப் பொதிகள் வழங்கவென நிதியொதுக்கப்பட்டு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் ஆளுந ரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டது.

2023 ஆம் ஆண்டு உத்தேச வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலும் கர்ப்பிணிகள், முதியோர் முன்பள்ளிச் சிறார்கள் போன்றோருக்கான நலத் திட்டங்களுக்கு நிதியொதுக்கப்பட்டன.

ஆயினும் தற்போது கர்ப்பிணிகளாகப் பதிவு செய் யப்பட்ட சிலருக்கு குழந்தைகள் கிடைத்தபோதிலும் ஆளுநரின் அனுமதி கிடைக்காததால் இன்னமும் பொதிகள் வழங்கப்படவில்லை.

சபையால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நிறைவேற்ற மாகாண ஆளுநரின் அனுமதி பெறப் படவேண்டும்.

மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கில் மேற் கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அனுமதி தாமத மாக வழங்கப்படுவதால் உரிய காலத்தில் மக்கள் பயன்பெற முடியாதுள்ளது என சபை உறுப்பினர் க.கஜிதன் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் வலையமைப்பு 'தெரியக்கூடியோருக்கு' தெரியும்

## வடக்கு ஆளுநர் சூசகம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

வடக்குக்கு யார் போதைப்பொருள் கொண்டு வருகின்றார்கள்? யார் விற்பனை செய்கின்றார்கள்? என்பது தெரியக்கூடிய ஆள்களுக்குத் தெரியும். அது தெரிந்தால் அடுத்த கேள்வி அதைத் தடுக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கின்றீர்கள்? என்பதே. இப்போதைக்கு நாங்கள் போதைப்பொருள் பாவனையாளர்களை அடையாளம்கண்டு கைதுசெய்து வருகின்றோம்– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.



இணையமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'வடக்கில் போதைப்பொருள் விவகாரம் தொடர்பில் நாம் மிகவும் அவதானம் செலுத்தியுள்ளோம். வடக்கில் ஆறு விதமான போதைப் பொருள்களைப் பாவிக்கின்றார்கள். அதில் ஒன்று மட்டும்தான் கடல் ஊடாக இங்கு வருகின்றது. ஏனைய போதைப்பொருள்கள் தரை வழியாக வடக்குக்கு வருகின்றன. நான் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு போதைப்பொருள் பிரச்சினையால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைப்பட்டுள்ள இளைஞர்களைக் கண்டேன். அது ஒரு துக்கமான கதை. வடக்கில் போதைப்பொருள் பிரச்சினையை இலகுவாக நிறுத்த முடியாது. இந்தப் பிரச்சினை இங்கு மட்டும் இருக்கும் பிரச்சினை அல்ல. போதைப்பொருள் பிரச்சினை முழு இலங்கையிலும் இருக்கின்றது. வடக்கில் ஒவ்வொரு நாளும் சராசரி 500 படகுகள் கடலுக்குப் போய் வந்தால் அவற்றில் குறைந்தது ஒன்றில் அல்லது இரண்டில் குறித்த போதைப் பொருள் வடக்குக்கு வருகின்றது. இந்த நுட்பமான வலையமைப்பை இலகுவில் நிறுத்த முடியாது. இது மிகவும் பெரிய பிரச்சினை. எனினும், இதைப் பார்த்துக்கொண்டு நாங்கள் சும்மா இருக்கமுடியாது. அதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுப்போம்' - என்றார். (ம-22)

# யாழிலிருந்து புதுக்குடியிருப்பு சென்ற 5 கொள்ளையர்கள் மக்களிடம் மாட்டினர்

முல்லைத்தீவு, டிசெ. 1

புதுக்குடியிருப்பு 8ஆம் வட்டாரப் பகுதியில் வீடுடைத்து கொள்ளையிட முயற்சித்த இளைஞர் குழுவொன்றை அந்தப் பகுதி இளைஞர்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

அதிகாலை 2 மணியளவில் வீடொன்றை உடைத்து 5 பேர் அடங்கிய குழுவொன்று கொள்ளையிட முயற்சித்தது. வீட்டின் உரிமையாளர் விழிப்படைந்து சத்தமிட்டதையடுத்து கொள்ளையர்கள் தப்பியோடினர்.

அதனையடுத்து புதுக்குடியிருப்பு பிரதேச கிரா மங்களைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றிணைந்து தேடுதலில் ஈடுபட்டனர். மந்துவில் பகுதியில் 3 கொள்ளையர்களையும் ஏனைய இருவரையும் இரணைப்பாலைப் பகுதியில் வைத்துப் பிடித்து மரத்தில் கட்டிவைத்து 'கவனித்தனர்'.

அதன்பின் சந்தேகநபர்களையும் அவர்களிடம் மீட்கப்பட்ட கூரிய ஆயுதங்களையும் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், சங்கானை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் அவர்களுக்கு உடந்தையாகச் செயற்பட்ட இரணைப்பாலைப் பகுதியைச் சேர்ந்த மற்றொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-19)

# மோட்டர்கள் திருட்டு; சந்தேகநபர்கள் கைது!



யாழ்ப்பாணம், டிசெ. 1

புன்னாலைக்கட்டுவன் - ஈவினை பண்ணைப் பகுதியில் மோட்டர்கள் திருடிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் ஈவினை - பண்ணைப் பகுதியில் 4 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு மோட்டர்கள் திருடப்பட்டன என்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் ஈவினைப் பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்தனர். (ஒ-14, 23)

# நல்லூர் பிரதேசசபை பட்ஜெட் 15 வாக்குகளால் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணம்- நல்லூர் பிரதேசசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் 15 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வாக்கெடுப்பு தவிசாளர் ப.மயூரன் தலைமையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு உறுப்பினர்கள் சுகவீனம் காரணமாக வருகைதரவில்லை.

வருகைதந்த 17 உறுப்பினர்களில் இலங்கை தமிழரசுக் கட்சியின் 3 உறுப்பினர்கள், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் 3 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 4 உறுப்பினர்கள், சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலா ஒரு உறுப்பினர் என 15 பேர் ஆதரவாக வாக்களித்தனர். அதேவேளை, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் 2 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

அதனையடுத்து நல்லூர் பிரதேசசபையின் 2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (ச-20,125)

# சாவகச்சேரி நகரசபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

சாவகச்சேரி, டிசெ. 1

சாவகச்சேரி நகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் 17 உறுப்பினர்களின் ஆதரவுடன் நேற்றுப் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பான அமர்வு சபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் சபா மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் வரவு-செலவுத்திட்டத்தை அமர்வில் சமர்ப்பித்தார். ஐ.தே.கட்சி உறுப்பினர் ஒருவர் சபை அமர்வில் கலந்துகொள்ளாத நிலையில், அமர்வில் ஏனைய 17 உறுப்பினர்களும் வரவு - செலவுத்திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். (ஒ-14,9)

# வடக்கின் பல பகுதிகளுக்கும் இன்று முதல் மழை

## புவியியற்றுறையின் விரிவுரையாளர் நா.பிரதீபராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

வடகீழ் பருவக்காற்றுடன் வங்காள விரிகுடாவில் கீழைக் காற்றுக்களும் இணைந்திருப்பதன் காரணமாக இன்று முதல் எதிர்வரும் 4ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது பரவலாக மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-


இவ்வாண்டு இதுவரை 4 தாழமுக்கங்கள் வங்காள விரிகுடாவில் உருவாகின. எனினும் ஒரு தாழமுக்கம் மட்டுமே எமக்கு மழையைத் தந்துள்ளது. இரண்டு தாழமுக்கங்கள் அவைக்கு அண்மையில் தோன்றிய உயரமுக்க நிலைமைகளால் தமது ஈரப்பதன் கொள்ளளவை இழந்து வறண்ட காற்றாகவே வீசின. ஒரு தாழமுக்கம் வடக்கு நோக்கி நகர்ந்ததால் எமக்கு எத்தகைய பயனையும் தரவில்லை.

எங்களின் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்) விவசாய, நீர்ப்பாசன, நீர்வழங்கல் என தரைமேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீருடன் தொடர்புடைய அனைத்து [illegible] கும் ஆற்றல் [illegible] வக்காற்றால் கிடைக்கும் மழைவீழ்ச்சி விளங்குகிறது. நவம்பர் 20ஆம் திகதி வரையான நிலைமைகளின்படி, இவ்வாண்டு வடக்கு மாகாணத்தின் சராசரி மழைவீழ்ச்சியை விட 130 மி.மீ. மழைவீழ்ச்சியைக் கூடுதலாக நாம் பெற்றுவிட்டோம். வழமையாக வடக்கு மாகாணத்தின் ஆண்டு மொத்த மழைவீழ்ச்சியில் 65 வீதம் பங்களிப்புச் செய்யும் வடகீழ் பருவக்காற்று இவ்வாண்டு 22 வீதம் மட்டுமே பங்களித்துள்ளது. இதற்குக் காரணம் இவ்வாண்டு முழுவதும் பரவலாக எமக்குக் கிடைத்த மழைவீழ்ச்சியே. ஆனால், பெருநிலப்பரப்பின் பல குளங்கள் [illegible]ள்ளளவில் அரைப்பகுதி [illegible]ர்த்தி செய்யவில்லை. வன்னியின் பல பகுதிகளில் வயல்களுக்கு தற்போதே நீர்ப்பாசன வசதிகளை வழங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

அடுத்த வருட சிறுபோகத்தைப் பற்றி சிந்திக்கக்கூட முடியாத நிலை ஏற்படும். மழையை நம்பி மட்டுமே மேற்கொள்ளப்படும் யாழ்ப்பாண மாவட்ட நெற்செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் பயிர்கள் வாடிவிட்டன. இத்தகைய சூழ்நிலையில் எதிர்வரும் வாரங்களில் எமக்கு நிச்சயமாக ஒரு பெருமழை அவசியம். தற்போதைய வளிமண்டல நிலைமைகளின்படி எமக்கு மழை கிடைக்கும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. எனினும் வளிமண்டல நிலைமைகள் பல்வேறு காரணங்களால் மாற்றமடையலாம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
05.05.1969

மறைவு
01.11.2022

அமரர்
## செல்வராஜா றமேஸ்
திதி : அட்டமி

வார்த்தைகள் தடுமாறுகின்றதே அண்ணா
நேற்றுக் கண்ட உனை நினைத்து
நெஞ்சம் உருமாறுகின்றதே!! அண்ணா
காந்தமாய் எமையீர்த்த உனை
காலன் கவர்ந்து சென்றதேனோ அண்ணா ?
காலமெல்லாம் உம் உறவு
நினைந்துருக காததூரம் எமைவிட்டு சென்றதேனோ அண்ணா ?
அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா
இறைபதம் சேர இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குறிப்பு:
எதிர்வரும் (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து உடன்வந்து கலந்துகொண்டோர்க்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் ஊடாக எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"

077 313 5195 செ.சுரேஷ் (சகோதரன்)

## நூல் வெளியீடு



அமரர் இரா.மு. சுப்பிரமணியத்தின் மூன்றாம் ஆண்டுநினைவு தினத்தை முன்னிட்டு அவரால் எழுதப்பட்ட 'சந்நிதியான் சிலேடை வெண்பா' நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச)

## தையல் டிப்ளோமா விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, டிசெ.1
தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்திப் பிரிவால் 2023 ஆம் ஆண்டுக்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பங்களை தமது கிராம அலுவலர் பிரிவு அல்லது பிரதேச கிராம அபிவிருத்தி அலகு ஆகியவற்றில் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

பல்கலை நுழைவுக்கான
# உ/த பரீட்சையில் மாற்றம் தேவை
### தேசியபேரவை உபகுழுவில் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 1
திறன்களைக் கொண்ட தலைமுறையை உருவாக்கும் வகையில் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாற்றம் செய்வது குறித்து தேசிய பேரவை உபகுழு ஆலோசனைக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

பல்கலைக்கழக நுழைவுத்தேர்வான க.பொ.த. உயர்தரப் பரீட்சை, திறன்களைக் கொண்ட தலைமுறையை உருவாக்கும் வகையில் மாற்றப்பட வேண்டும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அது தொடர்பில் நிலைமாறு காலமொன்று தேவை. முன்னோக்கிய வழிகள் அடங்கிய முன்மொழிவொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்குக என குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டார். மேலும் கல்வி முறையின் மூலம் தொழில் பயிற்சி மற்றும் திறன்மிக்க தொழிலாளர்களை அங்கீகரித்து மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் பங்குபற்றினர். (ச-இ)




# தேசியமட்டக் கால்பந்தாட்டம்: சென்.பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ. 1
தேசியமட்டக் கால்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது. இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து பிறிதொரு வடமாகாண அணியான மன்னார் சென். சேவியர் அணி பலப்பரீட்சை நடத்தியது. கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. முதல் பாதியின் முடிவில் சென். சேவியர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இரண்டாவது பாதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி பதிலடி கொடுக்க நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-20)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள் சிலருக்கு எதிர்பாராத பணவரவுகிடைக்கும் நண்பர்கள்வகையில் திடீர் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். சகோதர வகையில் எதிர்பாராத சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். தாயின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதரரால் சங்கடங்கள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நோய்க்குத்தான் மருந்து மருந்துக்கு நோயல்ல!

**நோ**யுற்ற நிலையில் உடலளவிலும் மனதளவிலும் பலவீனமடைந்திருந்த ஒரு நோயாளி, இந்த அவல நிலையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக மருத்துவமனைக்குச் சென்றான். தொலைதூரத்தில் அவனை உட்கார வைத்த மருத்துவர்கள் தமக்குள் ஏதேதோ பேசிவிட்டு, அவனின் நோய்க்காக சில மருந்துகளைக் கொடுத்து அனுப்பினார்கள். 'உன் உடலுக்கு என்ன பிரச்சினை?' என்று ஒருவார்த்தையேனும் நோயாளியைக் கேட்கவில்லை. 'நோய் இதுவாகத்தான் இருக்கும்' என்று அவர்களாகவே முடிவெடுத்து, தாமே அதற்குரிய மருந்துகளையும் கொடுத்து அனுப்பியதன் விளைவாக, அந்த நோயாளியின் நோய் தீவிரமானதே அன்றி இம்மியும் குறையவில்லை.

அந்த மருத்துவர்களில் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மற்றையவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனில் நோயாளி யார்? வேறு எவருமல்லர். அது தமிழர்கள்தான்.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைப்பது என்று நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் பரிந்துரைத்திருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ''இந்தியாவுடன் இது தொடர்பில் பேச்சு நடத்தி காத்திரமான ஒரு முடிவுக்கு வரமுடியும். தற்போதுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுவை மாவட்ட அபிவிருத்திச் சபையாக மாற்றம் செய்வத் மூலம் இந்த விடயத்துக்கு (தமிழர்களின் தீர்வுக்கு) மேலதிகமாகப் பணம் செலவழிக்க வேண்டியதில்லை'' என்றும் அவர் எடுத்தியம்பியிருக்கின்றார். ஆக, 'விலாங்குமீன்' உளவியலின் அடிப்படையில் இந்தியாவையும் திருப்திப்படுத்தி – தமிழர்களுக்கும் தீர்வென்று ஏதோவொன்றைத் திணித்து – நிதியும் செலவாகாமல் இருக்கும் விதமாக ஒரு கல்லில் மூன்று மாங்காய்களை இலக்கு வைத்திருக்கின்றது மைத்திரியின் கருத்து. இதற்கு, 'மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைப்பதற்குத் தயார்' என்று ரணிலும் பச்சைக் கொடி காட்டியிருக்கின்றார். (ஆனாலும் இப்போது அதை ரணில் மறுத்திருப்பதாகச் சொல்வது வேறு கதை.)


தமிழர்களின் 70 ஆண்டுகால அரசியல் போராட்டமும், 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டமும் ஏற்கனவே முன்வைக்கப்பட்டு 'பெயிலாகிப்போன' மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கானதா? இந்தத் தீர்வுக்குத் தமிழர்கள் தயாரா? இதைத் தமிழ்த் தரப்பு ஏற்குமா? என்ற குறைந்தபட்ச சிந்தனையை – கருத்தாடலை – பேச்சுக்கான தொடக்கமுனையைக்கூட அவர்கள் வெளிப்படுத்தவில்லை. சுதந்திர தினத்துக்கு முன்பாக தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று ரணில் திட்டவட்டமாக ஒன்றுக்குப் பல தடவைகள் தெரிவித்தபோதே 'இதில் ஏதோ வில்லங்கம்' பூதாகரமாக மறைந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. அந்த வில்லங்கம் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக அரங்கேற ஆரம்பித்திருக்கின்றது. இந்த விடயம் அடுத்ததாக விவாதப் பொருளாகும். அதற்கு முன்னர் இது தொடர்பில் தமது உச்சபட்ச நடவடிக்கைகளை ஓரணியில் நின்று மேற்கொள்ள தமிழ்த் தேசியத் தலைமைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவேண்டும்.

'13', '13 பிளஸ்' போன்ற புலுடாக்கள், பெயிலாகிப் போன மாவட்ட அபிவிருத்திச் சபை போன்றவற்றை தமிழர்களை நோக்கித் திணிப்பது சர்வதேசத்துக்குக் கணக்குக் காண்பிக்கவா? என்ற கேள்விக்குரிய பதிலை தேடவேண்டிய கட்டாயமும், இந்தச் சூட்சுமங்களை – சதிவலைகளை அவிழ்த்தெறிய வேண்டிய தவிர்க்க முடியாத நிலையும் தமிழ்த்தேசியத் தலைமைகளின் முன்பாக தற்போது காலக்கடமையாக இருக்கின்றது. தமிழர்களிடம் கலந்தாலோசிக்காமல், அவர்களின் விருப்பு வெறுப்புக்களைக் கேட்காமல் மேற்சொன்னது போன்று தாமாகவே நோயையும் தீர்மானித்து தாமாகவே மருந்தையும் தீர்மானித்து அதைப் பரிந்துரைத்தும் விட்டார்கள் சிங்கள ஆட்சியாளர்கள். நோயை ஆராயாமல் விட்டதோடு அதற்குரிய சரியான நிவாரணியையும் கொடுக்காதுவிடின் நோய் எவ்வாறு நீங்கும்? ஆக, இங்கு மாற்றப்பட வேண்டியது மருந்துகளை மட்டுமல்லாது மருத்துவர்களையும்தான். மைத்திரி, ரணில், மஹிந்த போன்ற பேரினவாதிகளால் ஒரு [illegible] தீர்வில்லை என்பதைத்தான் அவர்களின் 'ம[illegible]' அன்றும் இன்றும் மெய்ப்பிக்கின்றது.

நாளொரு நல்வார்த்தை

" வெற்றிக்கு எந்தக் குறுக்கு வழியும் கிடையாது. நாம்தான் நடந்து நடந்து பாதை போட வேண்டும்"

- டிஸ்ரேலி



# மாவட்ட அபிவிருத்திச்சபை தோல்விகண்ட முறையாகும்!

## செல்வம் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 1

சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து பேசப்படும் சூழ்நிலையில், மாவட்ட அபிவிருத்தி முறைமைபற்றி ஜனாதிபதி கதைத்திருப்பது அதிர்ச்சியளிக்கின்றது. இது தோல்வி கண்ட முறைமையாகும். சமஷ்டி அடிப்படையிலான தீர்வே எமக்கு வேண்டும் – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான பேச்சு ஆரம்பிக்கப்படும் எனவும், 13 பிளஸ் பற்றியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த அறிவிப்பு அனைத்து தரப்புகளினதும் கவனத்தை ஈர்த்திருந்தது. இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜனாதிபதி கட்சிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார். 13 பிளஸ் பற்றியும் கருத்தாடலை உருவாக்கியிருந்தார்.

இந்த நிலையில் எதற்காக திடீரென அவர் மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை பற்றி கதைக்க வேண்டும்? அவரின் அந்த அறிவிப்பு எமக்கு அதிர்ச்சியளிக்கின்றது. மாவட்ட அபிவிருத்திச்சபை முறைமையானது தோல்விகண்ட முறைமையாகும்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வே எங்கள் இலக்கும். தமிழ்க் கட்சிகள் இது விடயத்தில் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை இல்லை. அதனால்தான் பேச்சுகளை நடத்துவதில் இழுபறி, தாமதம் என அதிகாரத் தரப்பு காரணம் கூறுவதற்கு நாம் ஒருபோதும் இடமளித்துவிடக்கூடாது" - என்றார். (ம-44)

# தூசுத்துகள் செறிவு யாழில் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 1

இலங்கையின் வளிமண்டலத்திலுள்ள தூசுத் துகள்களின் செறிவு அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் ஆகிய நகரங்களில் இந்த நிலை அதிகமாகக் காணப்படுகின்றது என அந்த நிறுவகத்தின் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

கடந்த நவம்பர் முதல் எதிர்வரும் மார்ச் வரை இந்தியாவில் ஏற்பட்டுள்ள வளி மாசடைவு இலங்கையையும் பாதிக்கும்.

நாட்டில் தூசுத் துகள்களின் செறிவு தற்போது நிர்ணயிக்கப்பட்ட மதிப்பை விட அதிக அளவை எட்டியுள்ளது.

இதனால் சுவாச நோயாளர்களை அவதானத்துடன் செயற்படுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-இ)

நாளை

02.12.2022

வெள்ளிக்கிழமை

கார்த்திகை 16

சுபநேரம் : 06.15 - 07.45

ராகுகாலம்: 10.45 - 12.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல் - 2023

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும். ஏற்கனவே 2022ஆம்ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு **"இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்பமுடிவுக் காலம் 01.12.2022 தொடக்கம் 31.12.2022 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.**

கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும் கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2023"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதிவான், இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 432 3440/ 021 432 3447 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.**

**செயலாளர்,**
**ந.மோகனரூபன்**
**அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு**

## முதலாவது அட்டவணை - (படிவம் - 01)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்....2023.... ஆம் ஆண்டு**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :.......................................
2. பிறந்தநாள் :.......................................
3. இந்து சமயத்தவரா?.......................................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் வழிபடுபவரா? :-........... ..........................
5. நீங்கள் உறுப்புரிமை 03(2)(ஏ) அல்லது 03(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின்,இந்த ஆண்டு கோயிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி :- .... .......................................
7. தேசிய அடையாள அட்டை இல:.......................................

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற் கட்டளையின் விபரம் :

| காசுக்கட்டளை / த.க இல | அலுவலகமும் வழங்கிய நாளும் | தொகை |
|---|---|---|
| ........................ | ........................ | .............. |

நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
இந்தக் கோயிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
இக்கோயிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு, வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

..............................
விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் .................. ஆம் ஆண்டு ............. மாதம் ............. நாளன்று ............. என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார். என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்
..............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு** :- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்து மத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2022.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## இரண்டாம் அட்டவணை - (படிவம் - 02)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**

**செயலாளர், 2023 ஆம் ஆண்டு**
**அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

**அன்பார்ந்த ஐயா,**

### வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்

..................ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.......... அஞ்சலகத்தால் .................. ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட........................ இலக்கங்கொண்ட காசுக் கட்டளை / தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் : .......................................
முகவரி : .......................................
எனக்குள்ள உபயம்:.......................................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :.......................................

..............................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் .................... ஆம் ஆண்டு ................ மாதம் ............... நாளன்று ............. என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

என் முன்னிலையில்
..............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு** :- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்து மத குரு , இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2022.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(cs38880) (2.6)

# ஈராண்டு நினைவலைகள்



தோற்றம் 24 . 02 . 1987

மறைவு 22 . 11 . 2020

## அமரர் கணபதிப்பிள்ளை அழகேந்திரன்

(பழைய மாணவன் யாழ் இந்துக்கல்லூரி உயர்தர பிரிவு - 2006)

**திதி: வளர்பிறை அட்டமி**

ஈராண்டுகள் உனை இழந்து அழகா!
கார்த்திகை 22 கடுங்குளிர் காலம் சூரியன் மறையும்
நேரம் எங்குதான் எமை விட்டு வெகு தூரம் சென்றாய்
உனை காண ஈராண்டாய் ஏங்குகிறோமடா - அழகா
சூரியன் போல உன் சிரித்த முகத்தையும் செந்தளித்த
பார்வையையும் எங்குதான் காண
நீலிப்பந்தனையில் நித்தியமாய் சத்திய வாழ்வு வாழ்ந்த
சற்றும் வஞ்சகம் அறியா பாலகன் நீ - அழகா
இப்பூவுலகில் நீ செந்தளிர் சூரியனாக சஞ்சரித்த
போது நீ எமைவிட்டு இடையில் போயிடுவாய் என்று
கனவிலும் நினைக்கவில்லையடா
எம்மவரில் நீ ஆணழகனடா
பெயரில் மட்டுமல்ல உருவத்திலும் நீ அழகன் தானடா
அன்புத்தம்பி - அழகா எங்குதான் போனயடா
ஆடலரசனின் ஆனந்த கூத்தை காணும்காலத்தில்
எமைவிட்டு சென்றாயடா
திருவிழாக்காலத்தில் உன் நினைவுகளுடன்
காலமெல்லாம் வாழ்கின்றோம் - அழகா

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பர சவுந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர பெருமானின் பாதாரங்களை வேண்டி நிற்கின்றோம்.

நீலிப்பந்தனை,
காரைநகர்.

நினைவுகளுடன்....
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 12 1935



இறப்பு 28 11 2022

## திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம்

**(இளைப்பாறிய MLT)**

மலேசியாவை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த வட்டுகோட்டையை சேர்ந்த திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம் அவர்கள் 28.11.2022 திங்கட்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற ஆனந்தலஷ்மி அவர்களின் அன்புக் கணவரும் தர்ஷினி, வேணுகோபால் ஆகியோரின் அன்புத்தந்தையும் சரஸ்வதி, பரமசிவம் காலஞ்சென்றவர்களான பரமநாதன், கமலாதேவி, சக்திதேவி, யோகநாதன், கணேசன் ஆகியோரின் அன்பு சகோதரரும் பவந்தியின் அன்பு மாமனாரும் அனிக்காவின் அன்பு பேரனும் ராஜராஜேஸ்வரன் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சபாநாதன், ஜெயலஷ்மி ராஜரத்தினம் அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 01.12.2022 இன்று வியாழக்கிழமை காலை 8 மணியளவில் Mahinda மலர்ச்சாலையில் (591, Galle Road, Mt.Lavinia) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் மு.ப 10 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -10 கண்டி வீதி ஆதன இல. 182 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் முத்தையா சிவநாதன் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கண்டி வீதி இல. 182 ஐச் சேர்ந்த லெய்ரன் பொணிவஸ் என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1004ம் இலக்க 15.06.2011ம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளதுடன் 1982ம் ஆண்டிலிருந்து தனது ஆட்சியிலுள்ளது எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன விபரம்:** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை கிராமசேவையாளர் பிரிவு J/93 யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "விளாத்தித்தோட்டம்" நிலப்பரப்பு பூச்சியம் குளி பூச்சியம் எட்டு தசம் எட்டு எட்டு (08.88) வீடும் கிணறும் எல்லைகள்.

கிழக்கும் தெற்கும் :- ஒழுங்கை
வடக்கு :- கண்டி வீதி
மேற்கு :- ஜேக்கப்பினதும் பெண் பரமேஸ்வரியினதும் ஆதனம்.
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது லெய்ரன் பொணிவஸ் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பரித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு / முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது லெய்ரன் பொணிவஸ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(cr 38579) (2.6)

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல் - 2023
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை

2023ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள் /உருக்குவீட்டு உபகரணப்பொருட்கள்/ பிளாஸ்ரிக் பொருட்கள்.
02. காகிதாதிகள் மற்றும் எழுது பொருட்கள்.
03. மின்சார உபகரணங்கள் மற்றும் தெரு விளக்கு உபகரணங்கள்.
04. கொங்கிறீட் பொருட்கள்/ ஹியூம் குழாய்கள்/ சீமெந்துக் கற்கள்.
05. ரயர் வகைகள்/ ரியூப் வகைகள் / பற்றிவகை.
06. வாகனம், இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பொருட்கள்.
07. கணினிகள் மற்றும் கணினி துணைப்பொருட்கள்.
08. புகைப்படப்பிரதி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ டுப்ளோ இயந்திரம்.
09. நூலக நூல்கள்.
10. சீமெந்து / கண்ணாடி உற்பத்திகள்/ அலுமினியவேலைகள்/ இரும்பு உட்பட கட்டடப்பொருட்கள்.
11. அறிவித்தல் பலகைகள்/ பதாதைகள்/ பெனர் / ஸ்டிக்கர்.
12. துடைப்பம்/ விளக்குமாறு/ தும்புத்தடி/ தூரிகைகள்/ சிறியகால்துடைப்பங்கள்/கழுவும் திரவங்கள்.
13. சிற்றுண்டி / மதிய உணவு

**சேவைகள்**

01. அனைத்து வகையான அச்சுவேலைகள்.
02. அலுவலக தளபாடத் திருத்தவேலைகள்.
03. கணினி துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்த வேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்.
04. மோட்டார் வாகன திருத்த வேலைகள்/ சேவிஸ் செய்தல்.
05. பதாதைகள் மற்றும் பெயர்ப்பலகைகள் வரைதல்/ தயாரித்தல்/ அச்சடித்தல்
06. இறப்பர் முத்திரை தயாரித்தல்.
07. டியூப் ஒட்டுதல், ரயர்களுக்கு திரிவைத்தல், ரயர்களை மீள நிரப்புதல், ரயர்களை மாற்றுதல் போன்ற சேவைகள்.
08. நிர்மாண ஒப்பந்த வேலைகள்
09. ஏற்றியிறக்கும் வாகனங்களினை வாடகைக்கு விடல்

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாகவே அல்லது தொலைபேசி இல. 0212241130 மூலமாகவோ அறிந்துகொள்ளலாம்.

**பொது நியந்தனைகள்**

01. பதிவு செய்து கொள்ளும் அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு அம்சத்தின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வியாபாரப் பதிவுச்சான்றி தழின் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ளும் நிர்மாண ஒப்பந்ததாரர்**

01. 50,000.00 ரூபா வரை 500.00
02. 50,000.00 ரூபா முதல் 1500 000.00 வரை 1500.00
03. 1,500,000.00 ரூபா முதல் 2,000,000.00 வரை 2000.00
04. 2,000,000.00 ரூபாவுக்கு மேல் 2500.00

ஏனையோர் ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித் தனியாக 500.00 ரூபா கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

2. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடம் விலை மனுக்கள் கோரப்படும் என்பதுடன் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலை மனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகை செயற்பாடுகளைக் கையாளும் உரிமை சபையைச் சார்ந்தது.

3. இந்தச் சபையினால் வழங்கல் கட்டளை பிறப்பிக்கட்டப்பட்டு உரியகாலத்தில் பொருட்கள் சேவையை வழங்கத்தவறினால் முன்னறிவித்தலின்றி வழங்கல் கட்டளை இரத்து செய்து அடுத்த வழங்குநருக்கு கட்டளை அனுப்பப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும். குறித்தகாலத்தில் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறும் வழங்குநர்கள்/ ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.


4. தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் **"செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை"** என்னும் பெயருக்கு வரையப்பட்ட காசோலை மூலம் அல்லது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 7573141 இலங்கை வங்கி காங்கேசன்துறை கணக்கு இலக்கத்திற்கு வைப்புச்செய்து வைபபுச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தினை பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

5. எல்லா விண்ணப்பங்களும் 2022.12.28 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் **தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023ஆம் வருடத்திற்கான வழங்குநர் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**திரு.சோ.சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.**

01.12.2022

# நினைவழியாத ஓராண்டு



மண்மகிழ
05
12
1930

விண்மகிழ
10
12
2021

அமரர்

## கணபதிப்பிள்ளை சின்னராஜா

**திதி:-01.12.2022**

உங்கள் ஜீவனுள்ள நாளெல்லாம்
எங்களை அன்பு காட்டி அரவணைத்தீர்கள்
எங்கள் ஜீவனுள்ள நாளெல்லாம்
உங்களை மறவோம்.

உங்கள் நினைவுடன்,
குடும்பத்தினர்.

**981/3, வளன்புரம்,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
26
07
1940



மறைவு
30
11
2022

## தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (K.T)

**(முன்னாள் தொலைத்தொடர்பு பொறியியலாளர் - யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்)**

மயிலிட்டி தெற்கை பிறப்பிடமாகவும் உடுவில் வீதி, மருதனார்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (K.T) (முன்னாள் தொலைத்தொடர்பு பொறியியலாளர், யாழ்ப்பாணம் வவுனியா, மன்னார்) அவர்கள் நேற்று (30.11.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சற்குணதேவியின் அன்புக் கணவரும், பாலசுந்தரம் (பிரான்ஸ்), அமுதலிங்கம் (துர்க்கா கவுஸ், சுன்னாகம்), அன்னலச்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சகுந்தலாதேவி, சுலோஜினி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், பகீரதி (கனடா), பாலபாரதி (கனடா), பகீரதன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், மோகனதாஸ், சிவப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சகனா, றொஜன், கௌசிகா, மாதங்கி ஆகியோரின் அன்புப் பேரனும், யோகராஜா, சகுந்தலாதேவியின் மைத்துனரும், ஆனந்தன்- தாரணி (இந்தியா), சுகந்-தனுஜா (UK), Dr.நந்தகோபன் (வவுனியா) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு உடுவில் வீதி, மருதனார்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை, இணுவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
[illegible] (மகன்) +447459306958
Dr.[illegible]நந்தகோபன் (பெறாமகன்)
077 1999379

**தகவல்:**
ந.யோகராஜா
(T.P:0771386907)

(CS 22035) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைவிட்டு வெளியேறும் மருத்துவர்கள்

கொழும்பு, டிசெ. 1

கடந்த 8 மாதங்களில் சுமார் 500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுகாதார நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை தொடருமானால், நாட்டின் சுகாதார அமைப்பு சீர்குலையும் நிலைமையை எதிர்நோக்கும் அபாயம் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-இ)


## அரசாங்க அறிவித்தல்
### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
### நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

2022.10.19 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 2022.12.16 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளருக்காக, மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(cr.38589) (2.6)

## வேலைவாய்ப்பு



யாழ்ப்பாணத்தில்
இயங்கும் ES Printers
அச்சகத்திற்கு

★ வரவேற்பாளர் தேவை

ஆர்வம் உள்ளவர்கள் தங்கள்
சுயவிவரக் கோவையுடன் நாளை
(02.12.2022) வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணிமுதல்
நண்பகல் 12.00 மணிவரை
நேரில் சமுகம் தரவும்.

**359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

எங்கள் நெஞ்சை விட்டகலாத
அன்புத் தந்தையின்

## 10 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம் 10 - 06 - 1929

மறைவு 20 - 11 - 2012

அமரர்

## செல்லையா இராசதுரை

ஒரு தசாப்தம் கடந்திட்டோம் அப்பா
உங்கள் நினைவுகளை சுமந்து கொண்டே!
நினைக்காத நாளென்று எதுவுமில்லை
என்றும் எங்கள் சிந்தையில் வாழ்கிறீர்கள்
அன்பு முகமும் அறிவுரைகளும் எம்
நெஞ்சை விட்டகலாது அப்பா
எங்கிருந்தோ எமை வழி நடத்தும் அன்புத்தந்தையே
உம் மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
உம் ஆசி வேண்டி நிற்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

கைதடி.

(CS 22029) (3/6)


# புதுக்குடியிருப்பு பிரதேசசபை
# பொது அறிவித்தல் - 2023

**1. படவரைஞராக பதிவு செய்தல்.**

1.1. 2023 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்வதற்கும், புதுப்பித்து கொள்வதற்கும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**2.வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2023**

2.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149,150,151 ஆம் உப பிரிவுக்கு அமைவாக இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2023ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தைத் தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனை பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரியகட்டணங்களை 2023.03.31 ஆம் திகதிக்குள் மீளச் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுகொள்கின்றேன்.

**3.வீடமைப்பு நகரசீர்திருத்தம் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார், அரசசார்பு கட்டங்கள், மதில், மலசல கூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளை அனுமதி இன்றி செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கபடாத பட்சத்தில் புதுப்பித்தல் வேண்டும்.

3.3. சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் (COC) பெற்றுக் கொள்ளவேண்டும்.

3.4. அனுமதியின்றி கட்டடம் கட்டுவோர் மீது, புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2023ஆம் ஆண்டு வர்த்தமானி பிரசுரத்திற்கமைவாக தண்டப்பணம் அறவிடப்படும்.

**4.சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) - 2023**

4.1. மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, எமக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க, 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக, மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கபட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2023 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றோம்.

**5. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

5.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) பிரிவிற்கு அமைவான துணைவிதியின் பிரகாரம் இப் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 31.03.2023 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடானான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள விளம்பரப்பலகைகளுக்குப் பிரதேசசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத விளம்பரப்பலகைகள் பிரதேசசபையால் முன்னறிவித்தலின்றி அகற்றப்படும்.

**6. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி வகைகள் விற்பனையைத் தடைசெய்தல்.**

6.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிகடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1கி.மீ வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ, வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யபட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியதருகின்றோம்.

**7.பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

7.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றிக் கொண்டுசெல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யபட்டுள்ளது. தவறின் பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

7.2. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களைப் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தங்களிடம் சேரும் கழிவுப்பொருட்களைக் கொள்கலனில் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தைச் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**8.பொதுசுகாதாரம் பேணுதல்.**

8.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும், பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும், தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**9.கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்**

9.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 66(1) ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் பொதுப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்தி உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும், தவறும் பட்சத்தில் பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப் பகுதிகளில் பகல்,இரவு நேரங்களிலும் ஏனைய வீதிகளில் இரவு நேரத்திலும் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு பிடிகூலி, தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன் செலுத்தத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**10. சபை எல்லைக்குள்.**

10.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 68ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் கல், ஆற்றுமணல்,கிரவல் என்பவற்றுக்கான வழிஅனுமதி குறித்த உப அலுவலங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

10.2. சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தரிப்பிட அனுமதி குறித்த உபஅலுவலகங்களில் பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

**11. சடலங்களை தகனம் செய்தல்.**

சுடுகாடுகள் இடுகாடுகள் சட்டத்திற்கமைய புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் சடலம் தகனம் செய்வதற்காக பிரதேசசபையின் 2023 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பிரதேசசபையின் அனுமதி பெற்று மயானக்கட்டணம் செலுத்தியே தகனம் செய்தல் வேண்டும்.

**12. காணிகளை பராமரித்தல்.**

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்புக்களுக்கு அண்டிய காணிகள் துப்பரவு செய்யாது பராமரிப்பற்று பற்றைக்காடுகளாக காணப்படின் அவற்றினை உரியவர்கள் துப்பரவு செய்தல் வேண்டும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**13. ஆதனவரி விதித்து அறவிடல்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1),(2),(3) பிரிவின் கீழ் புதக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள கோம்பாவில், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு ஆகிய கிராமங்களில் கட்டமைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் இவ் ஆண்டில் அடைந்துள்ள அபிவிருத்திக்கு ஏற்ப இனங்காணப்பட்டு எதிர் வரும் ஆண்டிலிருந்து (2023) மதிப்பிடப்பட்ட ஆதனங்களுக்குரிய பெறுமதிக்கு ஏற்ப ஆதனவரியினை 4% ஆக அறவிடுவதற்காக 2022 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபை சபை அமர்வின் தீர்மான இலக்கம் **PTKPS/2022/58** இன் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டு, வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் **G/NPC/A4/LG/Approval/74/2022** இலக்க 27.09.2022 திகதிய கடிதம் மூலம் அனுமதிவழங்கப் பட்டதற்கமைவாக ஆதனவரியினை அறவீடு செய்தல்.

**[illegible],**
**தவிசாளர்,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**

2022.12.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழ்க்கையில் எத்தகைய தடைகள் வந்தாலும் நீங்கள விழுந்து விடமாட்டீர்கள். மனத்தில் தைரியத்தை வரவழைத்து உங்கள் கால்களை இந்த பூமியில் பதித்து, உங்களால் இயன்ற உயரத்திற்கு எழுந்து நில்லுங்கள். நம்பிக்கையான முறையில் உங்களுக்கு பலமாக நாங்கள் இருக்கின்றோம்.

அனைவரையும் அழைத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்வோம்

PLC PEOPLE'S LEASING

# க.பொ.த.சா/ தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

**யா/வரணி மத்திய கல்லூரி**

கே.தசானா - 9ஏ, வி.கவினா - 8ஏபி, ரி சஜிந்தன் - 8ஏபி, கே.அரவிந்தன் - 8ஏபி, ரி.தினேஸ் - 8ஏபி, கே.சாருஜா - 8ஏசி, ஆர்.நிகாஸ் - 8ஏசி, எஸ்.சுரோகா - 8ஏஎஸ், எஸ்.சாருசன் - 7ஏபிசி

**யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை**

டிலக்சிகா - 4ஏ3பிசிஎஸ், கவிப்பிரி - ஏ2பி4சி 2எஸ், வர்ஷிகா - பி2சி5எஸ், சபிஸ்னவி - பி3சி4எஸ், லதீபன் - சி5எஸ், அனிற்றன் - பி3சி2எஸ்

**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

சி.பார்கவி - 9ஏ, சி.தருண்யா - 9ஏ, கு.தர்மிகா - 9ஏ, ம.சிந்துஜா - 9ஏ, ச.நிருஷனா - 9ஏ, சு.ஜதுர்சிகா - 9ஏ, ம.சிந்துஷன் - 9ஏ, பி.கீர்த்திகன் - 9ஏ, ந.கஜீவன் - 8ஏபி, க.யகிதன் - 8ஏபி, ர.மாதினி - 8ஏசி, சோ.திவ்வியா - 7ஏ2பி, ப.ஜனுசன் - 6ஏ3பி, வி.நிவேதனன் - 6ஏ3பி,

சி.கஜலக்ஷன் - 6ஏ2பிசி, செ.மதுஷா - 6ஏ2பிசி, ச.பிரியந்தி - 6ஏ2பிசி, சி.சிவநதி - 6ஏ2பிசி, ம.வாணிதன் - 6ஏபி2சி, உ.தஜிந்தினி - 6ஏபி2சி, ப.டனுஜா -6ஏபி2சி, சி.சிற்பரன் - 5ஏ3பிசி, ச.யதுஷா - 5ஏ3பிசி, கோ.யனுசிகா - 5ஏ2பி2சி க.கீர்த்திகா - 5ஏ2பி2சி, சி.அபிசாயினி - 5ஏ2பிசிஎஸ், செ.சங்கவி - 5ஏபி2சிஎஸ், கு.திலக்ஷியா - 5ஏபி2சிஎஸ், த.வேணிலா - 4ஏ5பி, பி.சயந்திகா - 4ஏ4பிசி, ச.பிரியந்தன் - 4ஏ4பிசி, செ.திருசன் - 4ஏ3பி2சி,

செ.அனோஜிகா - 4ஏ2பி3சி, இ.மதுசிகா - 4ஏ2பி3சி, ஜோ.டெசிக்கா - 4ஏபி4சி, ச.அகநிலா- 3ஏ4பிசிஎஸ், அ. அதீனா - 3ஏ3பி2சிஎஸ், சி.ஜினிஷா - 3ஏ6சி,

**யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

ஆர்.தக்சன் 9 ஏ, எம்.சுடரகன் 9 ஏ, யு.ஷோபிதரன் 9 ஏ.எஸ்.ஷைஸ்நிஷன்9 ஏ, பி.சரண் 9 ஏ, எஸ்.ராதிக்கா 8ஏபி, எஸ்.மெரின் 8 ஏபி, பி.யதுர்ஷா 8ஏபி, எஸ்.புரன்சிகா 8ஏபி, ரி.வரதன் 7ஏபிசி, யு.தயாகரன் 7ஏபிசி, எஸ்.சிவாஜினி 7ஏ2பி, எம்.தரணிகா 7ஏ2சி, எம்.ஆன்மரீனா 7ஏ2சி, ஏ.றுலக் ஷன் 6ஏ3பி, வி.இந்துஜா 6ஏ3பி, ஏ.அனித்தா 6ஏபி2சி, ரி.டினோஜா 6ஏபி2சி, ஜே.கம்சன் 6ஏ2பிஎஸ், எஸ்.கிரிஷாந் 6ஏபிசிஎஸ், கே.விஸ்வசுந்தரசர்மா 5ஏ2பி2சி, எம்.சரண்ஜா 5ஏ2பி2சி, வை.ஆஷிக்கா 5ஏ3பிசி, பி.கேதுஷா 5ஏ3பிசி, எஸ்.அபிஷா5ஏ3பிசி, பி.பவஷ்ரீனா 5ஏ4சி, ஏ.றஸ்மினா 5ஏபி3சி, எஸ்.துவிசன் 4ஏ3பி2சி, வை.டிலுசன் 4ஏ5பி, ரி.விதுஜா 4ஏ4பிசி, ஜே.சோபிசன் 3ஏ6பி, எஸ்.பங்ககஜன் 3ஏ4பி2சி, பி.மதுமிதா 3ஏ4பிசிஎஸ், வி.லாவண்யா 3ஏ4பிசிஎஸ், என்.டயானா 3ஏ3பி3சி

## உடையார்கட்டில்...

எலும்பு எச்சங்கள் தென்பட்டுள்ளன. அது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டு, முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கையிட்டதை அடுத்து நேற்று அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா, சட்டமருத்துவ அதிகாரி றொகான் மற்றும் தடயவியல் பொலிஸார், கிராம அலுவலர், பொலிஸர் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மூவரின் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். தறப்பாளில் சுற்றப்பட்ட நிலையில் அந்த எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

எலும்பு எச்சங்களுடன் துப்பாக்கி ரவைகள், சிதிலடைந்த உடைகள், விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பயன்படுத்தும் சயனைட், இலக்கத்தகடு என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. பெண்களின் உள்ளாடையும் காணப்பட்டுள்ளது. ஒரு சயனைட் முழுமையாகவும், இரு சயனைட்கள் பாதியாகவும் காணப்பட்டுள்ளன. இலக்கத்தகட்டில் "ஞ" என்ற எழுத்துடன் இலக்கம் காணப்படுகின்றது. எறிகணை ஒன்றின் ஒரு பகுதியும் காணப்படுகின்றது.

மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சங்களை சட்ட மருத்துவ அதிகாரி மரபணு பரிசோதனைசெய்து அறிக்கையைநீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிவான் பணித்துள்ளார். (அ-எ-19)

## அரசின்...

விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கைத்தொழில், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. உணவுப் பாதுகாப்புத் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும். நாட்டின் உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

உணவுப் பாதுகாப்புக்கு 0.6 சதவீதமளவு நிதி தான் ஒதுக்கப்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், உணவு வீண்விரயத்தைக் கட்டுப்படுத்தவும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எவ்விதப் பரிந்துரைகளும் முன்வைக்கப்படவில்லை. உணவுப் பாதுகாப்பு ஆணைக்குழு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறியுள்ளமை கோப் குழுவின் போது ஆராயப்பட்டது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 32 சதவீதமானோர் பாதுகாப்பற்ற உணவு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர் என்று உலக உணவு ஸ்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் மூன்று வேளை உணவுக்குப் பதிலாக ஒன்று அல்லது இருவேளை உணவை மாத்திரம் உட்கொள்கிறார்கள். பணவீக்கம் அதிகரித்துச் செல்வதால் உணவுப் பணவீக்கம் நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது. நடுத்தர மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. நகரங்களின் உணவு பணவீக்கம் கடந்த மாதம் 85.5 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு அமைய நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் ஆரோக்கியமான உணவுகளுடன் மூன்று வேளையும் உணவு உட்கொள்ள வேண்டுமாயின் ஒரு மாதத்துக்கு ஒன்றரை இலட்சம் ரூபா செலவு செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

நாட்டில் மாதம் ஒன்றரை இலட்சம் சம்பளம் பெறும் குடும்பங்கள் எத்தனை உள்ளன என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும். இவ்வாறான பின்னணியில் மாதம் ஒரு இலட்சம் சம்பளம் பெறும் தரப்பினிடம் இருந்து வரி அறவிட வரவு - செலவுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

## உதவாத...

ஆகியோரின் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளையே தோற்கடிப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது என்று அறியமுடிகின்றது.

இந்த அமைச்சுக்களால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எந்தவிதப் பிரயோசனமும் இல்லை என்றும், எதுவித உதவியும் இந்த அமைச்சுக்களால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குக் கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தே இந்த அமைச்சுக்களைத் தோற்கடிப்பதற்குத் திட்டம் தீட்டப்படுகின்றது என்று பொதுஜன வட்டாரத்தில் இருந்து அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பகைத்துக்கொண்டு நிமால் சிறிபால டி சில்வாவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பகைத்துக்கொண்டு நஸீர் அஹமட்டும் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றதால் அந்தக் கட்சிகளின் ஆதரவும் மொட்டுக் கட்சியின் திட்டத்துக்குக் கிடைக்கும் என்று நம்பப்படுகின்றது. (அ-எ-22)

## மாவட்ட...

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) தெரிவித்த பதிலின் அர்த்தத்தை சிதைக்கும் விதத்தில் பல ஊடகங்களில் செய்திகளாக வெளியாகியுள்ளன.

2023ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில், மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு நேற்று (நேற்றுமுன்தினம்) பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைகளில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஸ்தாபிக்கத் தயார் எனத் தெரிவித்தார். அதுதவிர மாகாண சபைகள் கலைப்புத் தொடர்பில் ஜனாதிபதி எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. நிறைவேற்றுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கான களமாக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் செயற்படும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாகும். இதன் மூலம் வளர்ச்சிப் பணிகள் முறையாக நடைபெறுவதுடன், நிதி வீண்விரயம் மற்றும் தாமதங்கள் தவிர்க்கப்படும் - என்றுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரம்...
இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷேஹான் சேமசிங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-
வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவது. அமைச்சுப் பதவிகளைப் பெறுவது போன்ற பல விடயங்களை முன்வைத்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பலர் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். பேச்சுக்களில் ஈடுபடும் அனைவரும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வார்கள் என்றும் சொல்ல முடியாது- என்றார். (அ-எ-22)

**TABLE TENNIS**
**பயிற்சி வகுப்புக்கள்**
சாவகச்சேரியில் Table Tennis (மேசைப்பந்து) பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
107, கச்சாய் வீதி,
(ஸ்ரீமுருகன் கோயில் முன்பாக)
தொடர்புகளுக்கு:திரு.ப.பரணி 077 5797 590

# பொது அறிவித்தல்
## நல்லூர் பிரதேசசபை

**நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டடம் அமைப்பதற்கான ஆதனத்தினை பெற்றுக் கொள்ளுதல்.**

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்தினை அதன் ஆளுகைக்குட்பட்ட மையப்பகுதி ஒன்றிற்கு நகர்த்துவதன் மூலம் இப்பகுதிக்குட்பட்ட பொதுமக்களுக்கான சேவை வழங்கலை இலகுபடுத்த சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைய புதிய உபஅலுவலக கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான ஆதனமொன்றினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு சபைக்கு நன்கொடையாகவோ அல்லது விற்பனைக்கோ வழங்கக்கூடிய ஆதன உடமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

வழங்கப்படும் ஆதனம் நன்கொடையாளரிற்கு/ விற்பனையாளரிற்கு சட்ட ரீதியாக உரித்தான ஆதனமாக இருக்க வேண்டியதுடன். நன்கொடை வழங்குதலில் அல்லது விற்பனை செய்தலில் எதுவித சட்டரீதியான சிக்கல் நிலையினையும் கொண்டிருக்காமை அவசியமானதாகும்.

குறித்த ஆதனம் சபை ஆளுகைக்குட்பட்ட கொக்குவில் உபஅலுவலக பகுதியினுள் அமையும் காங்கேசன்துறை வீதி. குளப்பிட்டி வீதி. பொற்பதி வீதி மற்றும் ஆடியபாதம் வீதி என்பவற்றில் பிரதான வீதியிலோ அன்றி பிரதான வீதியை அண்மித்ததாகவோ அமைய வேண்டும் என்பதுடன். இது பொதுமக்கள் இலகுவில் அடையாளம் காணக்கூடியதாகவும். போக்குவரத்திற்கு இடையூறற்றதாகவும். இரண்டு முதல் நான்கு பரப்பிற்குட்பட்ட ஆதனமாகவும் அமைதல் வேண்டும்.

பொருத்தமான நன்கொடையாளர்கள் / விற்பனையாளர்கள் 2023.01.31 ம் திகதிக்கு முன்னராக சபையுடன் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.**
**2022.12.01**
(cr38591) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 07 . 1984
மறைவு 29 . 11 . 2022

## நடராசா முரளிதரன் (முரளி)


பெருமாள் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முரளிதரன் (முரளி) அவர்கள் கடந்த 29.11.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் அமரர் நடராசா தவமணிதேவி தம்பதியரின் அன்பு மகனும், சந்திரசேகரன் (ராஜன்-France), ஞானசேகரன் (சூட்டி), குணசேகரன் (கிளியன்), இராஜசேகரன் (மதன்), நகுலாம்பிகை (தங்கச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரியதர்சினி, சுதாஜினி, முத்துப்பிரியா, யோகராஜா, கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகேசினி, கோகுலன் (கீத்தன்), கோபிநாத் (கோபி), கபில்ராஜ் (கபில்), இந்துசன், கிருசன், லாதுசன், லசாங்கி, துலக்சன், பிருத்திகன், ரஸ்மிகன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஜயஷாமுகி (ஷாமுகி), சர்வப்பிரவினி (பிரவினி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2022) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பெருமாள் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(GS 22095) 1/6

# மரண அறிவித்தல்

## Lions மாணிக்கம் தவக்குமாரன் MJF,MAF



தோற்றம் 10.11.1950
மறைவு 30.11.2022

யாழ். சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் அளவெட்டி மற்றும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட Lions மாணிக்கம் தவக்குமாரன் அவர்கள் நேற்று (30.11.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லையா நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், அஜந்தினி (France), சிவந்தினி (நிரு மெடிக்கல்ஸ், அளவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிசாந்தன் (France), சிவரூபன் (ரூபன் ஸ்ரோர்ஸ் K.R, அளவெட்டி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சோதிநாதனின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கமலராணி, நவரத்தினம், கனகரத்தினம், காலஞ்சென்ற கணேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், அனிதா, நிரோன், அஞ்சலி, றோகான், நிருத்திகா (சம்பத் வங்கி, மானிப்பாய்), டினோஜன், அக்ஷயா, கீர்த்திக் ஆகியோரின் பேரனும், சிவாஜினி-மகேந்திரம் (நெதர்லாந்து), காலஞ்சென்ற கஜேந்திரன், சிவகாந்தன் - கௌசிகா (சுவிஸ்), ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அளவெட்டியில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**- 076 295 9564**
**077 288 7617**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CR 38594 1-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலில்...

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னரான மக்கள் எதிர்ப்பால் ராஜபக்சவினர் தங்கள் பதவிகளில் இருந்து விலக வேண்டிய சூழ்நிலை உருவானது. கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகிய பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டார். புதிய அமைச்சரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமவிங்கவால் நியமிக்கப்பட்டபோதும், அது இன்னமும் முழுமை பெறவில்லை. அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்திருக்கும் பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களின் வலியுறுத்தல்களைக் காதில் போட்டுக் கொள்ளாது செயற்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னணியில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் உள்ளார் என்றும் பேசப்படுகின்றது. தனது சகோதரர்களின் கடந்தகாலச் செயற்பாடுகளால் கடும் அதிருப்தியுற்றுள்ள மஹிந்த ராஜபக்ச இப்போது அனைத்து விடயங்களிலும் கடும்பிடியில் இருக்கின்றார் என்று கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இந்தநிலையில், மஹிந்த ராஜபக்ச இனி அரசியலில் இருந்து ஓய்வெடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. இதற்கு முன்னர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் இவ்வாறான ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, மஹிந்த இந்த நாட்டுக்குச் செய்ய வேண்டிய சேவை அனைத்தையும் செய்துவிட்டார். மஹிந்தவின் தலைமைத்துவம் இல்லை என்றால் இப்போதும் போர் நடந்துகொண்டிருக்கும்.

அவர் 80 வயதை நெருங்குகின்றார். அவர் ஓய்வெடுப்பது நல்லது. யாரும் அவரை அவர்களின் அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தினால் அதற்கு நான் இணங்கமாட்டேன். நெல்சன் மண்டேலாவின் மரணத்தின்போது உலகத் தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். அப்படியொரு கௌரவம் மஹிந்தவுக்குக் கிடைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, முன்னாள் நிதியமைச்சரும், மஹிந்த ராஜபக்சவின் சகோதரருமான பஸில் ராஜபக்சவின் கட்டுப்பாட்டிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன செயற்படுகின்றது என்று கூறப்படுகின்றது. (அ-எ-22)

## நல்லாட்சி...

விக்கிரமசிங்கவும் அரசியல் விருப்புடன் பணியாற்றவில்லை என்பது அவர்களது இன்றைய 'மாவட்டச் சபை தீர்வு' தொடர்பான கருத்தாடலிலிருந்து அம்பலமாகியுள்ளது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட சபை முறைமையை முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன பிரேரித்திருந்தார். அந்த முறைமையை செயற்படுத்தத் தயார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் சரவணபவன் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நல்லாட்சி அரசின் காலத்தில் ஜனாதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து புதிய அரசமைப்பு முயற்சியை ஆரம்பித்திருந்தனர். இதன் ஆரம்ப அமர்வில் உரையாற்றிய மைத்திரிபால, சிங்கள மக்களுக்கு சமஷ்டி என்றால் பயம். வடக்கு மக்களுக்கு ஒற்றையாட்சி என்றால் பயம். நாம் இந்தச் சொல்லாடல்களை விடுத்து அனைவரும் ஏற்கும் புதிய அரசமைப்பை உருவாக்குவோம் - என்றார்.

புதிய அரசமைப்பு சமஷ்டி முறையிலானதாக அமையாவிட்டாலும் ஓரளவு சிறந்த தீர்வை நோக்கி நகர்ந்தது. அது தமிழர்களுக்கு முழுமையான ஏற்புடையது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால், இப்போதுள்ள நிலைமைக்கு அது ஓரளவு முன்னேற்றகரமான விடயம்தான். அந்த முயற்சி ராஜபக்சக்களால் குழப்பியடிக்கப்படுவதாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் பல தடவைகள் கூறியிருந்தனர்.

ஆனால், அவர்கள் இப்போது மாவட்ட சபையை தீர்வாகப் பரிசீலிப்பது தொடர்பில் பேசும்போது, புதிய அரசமைப்பு முயற்சியில் அரசியல் விருப்புடன் முழு மனதுடன் அவர்கள் ஈடுபடவில்லை என்பது அம்பலமாகின்றது. தமிழர் தரப்பு அடிப்படையிலேயே தூக்கிக்கடாசிய மாவட்ட சபை முறைமையை இப்போது தீர்வு தொடர்பில் பரிசீலிக்கத் தயார் என்று இந்தத் தலைவர்கள் கூறுவதானது இந்தியாவையும் கேவலப்படுத்துகின்ற ஒன்று.

மாவட்ட சபை முறைமை தீர்வாகாது என்பதால்தான் இந்தியாவின் தலையீட்டுடன் மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அதைக்கூட தமிழர் தரப்பு தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், மாவட்டசபையை விட மேம்பட்ட மாகாணசபை முறைமையை இன்னும் மேம்படுத்தி அடுத்த கட்டத்துக்கு - ஒற்றையாட்சியை விட்டு செல்வதை விடுத்து இன்னும் கீழிறங்கும் - பின்னோக்கிச் செல்லும் சிங்களவர்களின் செயற்பாட்டால் இந்த நாடு ஒருபோதும் உருப்படாது - என்றுள்ளது. (அ-ஒ-5)

## கோத்தாவைக்...

மாதம் 9ஆம் திகதியும் தங்கி நின்ற கோத்தாபய, தற்செயலாக அன்று காலை தொலைக்காட்சியைப் பார்த்திருக்காவிட்டால் பின்வாசலால் தப்பியோடியிருக்கமாட்டார். அன்று போராட்டக்காரர்கள் அவரை அடித்துப் படுகொலை செய்திருப்பார்கள்.

-இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் போது வெற்றிகரமாகச் செயற்பட்ட கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியானதும் தோல்வியடைந்தது எப்படி? கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து தப்பியோடிய அன்று நடந்தது என்ன? அவரைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டப்பட்டதா? அந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டது எப்படி? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை வழங்கிய போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோத்தாபய தோல்வியடைய பல காரணங்கள் உண்டு. ஒன்று ராஜபக்ச குடும்பம். மற்றது அ[illegible] பஸில் போன்ற[illegible] கோத்தாபயவை பிழையாக வழிநடத்தியமையே தோல்விக்குப் பிரதான காரணம். அதேவேளை, ஜனாதிபதி செயலாளராக இருந்த பீ.பீ.ஜயசுந்தரவின் தாளத்துக்கு கோத்தாபய ஆடியமையும் அவரின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம்.

அடுத்தது அமெரிக்காவும் அவரின் தோல்விக்கு ஒரு காரணம். ஜனாதிபதிப் பதவியில் இருந்து ஓய்வுபெற்றதன் பின் அமெரிக்காவில் பிள்ளைகளுடன், பேரப்பிள்ளைகளுடன் கடைசிக் காலத்தைக் கழிக்க வேண்டும் என்று விரும்பினார் கோத்தாபய. அதனால் அவர் அமெரிக்காவை அதிகம் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை.

அமெரிக்கத் தூதுவருடன் நல்ல உறவைப் பேணி வந்தார் கோத்தாபய. ஆனால், அமெரிக்கா "டபிள் கேம்" ஆடியது. ஒருபுறம் கோத்தாபயவுடன் அமெரிக்கத் தூதுவர் இருப்பது போல் காட்டிக் கொண்டார். மறுபுறம், அவரைப் பதவி இறக்குவதற்காக வேலை செய்தார்.

கடந்த ஜூன் 9ஆம் திகதி காலை ஜனாதிபதி மாளிகையிலிருந்து கோத்தாபய தப்பியோடிய அன்று அவரை ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்தே கொல்வதற்கான ஒரு சதித்திட்டம் இருந்தது உண்மை. போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே நின்று ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது உடன் இருந்த பாதுகாப்பு அதிகாரிகளிடம் பாதுகாப்பு ஏற்பாடு பற்றிக் கேட்கின்றார் கோத்தாபய. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று கோத்தாபயவிடம் அவர்கள் கூறுகின்றார்கள்.

அப்போது அருகில் இருந்த ரிவி ரிமோட்டை எடுத்து ரிவியைப் போடுகின்றார் கோத்தாபய. அந்தவேளை போராட்டக்காரர்கள் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வருவது ஒரு தனியார் 'சனலில்' காட்டப்படுகின்றது. ஆனால், பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அதிகாரிகள் பொய் கூறினார்கள்.

அந்தக் காட்சியைப் பார்த்ததும்தான் கோத்தாபய பின்வாசலால் தப்பியோடினார். இல்லாவிட்டால் அவர் சிக்கி இருப்பார். போராட்டக்காரர்களால் அவர் அடித்துக் கொல்லப்பட்டிருப்பார். அவரைக் கொல்வதற்காக வகுக்கப்பட்ட திட்டம் தான் அது. அவர் அந்தச் செய்தியை ரிவியில் தற்செயலாகப் பார்த்ததால்தான் அன்று உயிர் தப்பினார் - என்றார். (அ-எ-22)

## ஆடைச்...

பணிக்கு வரலாம் என்று அரசாங்க ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கும் 2019 ஜூன் மாதம் 26ஆம் திகதி மற்றும் 2022ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி ஆகிய தினங்களில் வெளியான சுற்றறிக்கைகளே இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.பி.கே.மயாதுன்னவின் கையொப்பத்துடன் வெளியான புதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அண்மையில் ஆசிரியர்கள் சிலர் இலகு ஆடைகளை அணிந்து பாடசாலைகளுக்கு சமுகமளித்ததை அடுத்து சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## அடுத்த...

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய சபையின் பொருளாதார நிலைப்படுத்தல் தொடர்பாக குறுகிய மற்றும் நடுத்தர கால வேலைத் திட்டங்களை அடையாளம் காணும் உபகுழுவின் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் தற்போதைய நட்டத்தை ஈடுகட்டுவதற்கு 70 சதவீதம் மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் இலங்கை மின்சார சபையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர் என்று நாடாளுமன்றத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில் மின்கட்டண உயர்வுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை தற்போது சுமார் 650 பில்லியன் ரூபாவை வங்கிகள் மற்றும் மின்சார வழங்குநர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரிடம் கடனாகப் பெற்றுள்ளது.

செலுத்த வேண்டிய தொகையில் கிட்டத்தட்ட 35 பில்லியன் ரூபா புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை வழங்கிய நிறுவனங்களுக்கும், 75 பில்லியன் ரூபா அனல் மின் வழங்குநர்களுக்கும் செலுத்த வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, மின்கட்டண உயர்வு தொடர்பான தகவல்களைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மறுத்துள்ளது. மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது தொடர்பில் தற்போது பரிசீலிக்கப்படவில்லை என்று அதன் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## எச்.ஐ.வி....

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கலாநிதி றெகான் மற்றும் வவுனியா பொது மருத்துவமனையின் பாலியல் நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரியந்த பட்டகலு ஆகியோர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மருத்துவ கலாநிதி றெகான் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் 411 பேர் இந்த ஆண்டு எச்.ஐ.வி. தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 60 பேர் எச்.ஐ.வி. தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எச்.ஐ.வி. தொற்று ஏற்படக்கூடிய இடங்களில் விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எச்.ஐ.வி. தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்த ஆண்டு தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட இருவரும் 30 வயதுடையவர்கள் - என்றார்.

இது தொடர்பில் மருத்துவர் பிரியந்த பட்டகலு தெரிவித்ததாவது:-

எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்ட பின்னர் சுமார் 4 ஆண்டுகளுக்கு எந்த அறிகுறியும் தென்படுவதில்லை. ஆரம்பத்திலேயே அறிந்து கொள்வதன் ஊடாக தொற்றின் பாதிப்பைக் குறைத்துக் கொள்ளமுடியும். ஆனால், பெரும்பாலானவர்கள் நோய் முதிர்ச்சியடைந்த நிலையிலேயே அடையாளம் காணப்படுகின்றனர் - என்றார். (அ-எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடை வாடகைக்கு**

பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டை கல்வியங் காட்டில் கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 1750 746

**NEC- யாழ் நகர்**

பெருமாள் கோவில் அருகில்

கலை

வர்த்தகம்

A/L-2024

புதிய பிரிவுகள் ஆரம்பம்

03.12.2022 சனி காலை 8 மணி

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

அலுவலக தொடர்பு: 076 535 0999

**நாவலர் கல்வி நிலையம்**

பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி, யாழ் நகர்.

கலை

வர்த்தகம்

A/L-2024

புதிய பிரிவுகள் ஆரம்பம்

03.12.2022 சனி காலை 9 மணி

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

அலுவலக தொடர்பு: 076 1661 986

**A/L 2024**

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

ஆரம்பம்: 03.12.2022

காலை -8.00 மணி

COMMERCE STREAM

ENGLISH MEDIUM

ACC - D.Sam

B.ST - T.S.Richi

ECO - P.Ajanthan

DMI Jaffna

**அப்பம், கொத்து, நாசி**

யாழ்பாடி- விடுதி / உணவகம்

51, அம்மன் வீதி, நல்லூர்,

யாழ்ப்பாணம்.

021 222 6868 / 0777 340 026

**A/L 2024**

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

ஆரம்பம்: 03.12.2022

காலை -8.00 மணி

**வர்த்தகம்**

ACC - D.Sam

ECO - S.S.Sri

B.ST - T.S.Richi

**கலை**

TAM -R.S.சந்திரசேகர்

HIN -P.ஜோதீஸ்வரன்

HIS -M.பத்மன்

GEO -N.பாபு

P/S -K.S.இளங்கோ

LOG -E.S.பவன்

AGR -V.சசி

CHR -M.ஸ்ரீபன்

DRA -K.மங்களேஸ்

MED -K.V.நவநீதன்

H.SCI -V.சசி

**தொழில்நுட்பம்**

S4T - S.தயாபரம்

BIO TECH - K.ஜனா

ENG TECH - N.றஜிந்தன்

S.சத்தியதாஸ்

DMI Jaffna


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 07 . 10 . 1926



விண்ணில் 01 . 11 . 2022

கடந்த (01.11.2022) செவ்வாய்க்கிழமை இறையடி எய்திய எமது குடும்பத் தலைவர்

அமரர்

### நாகலிங்கம் குமாரகுருநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.12.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும், எங்கள் குடும்பத்தலைவரின் மரணச்செய்தி கேட்டு எங்களுக்கு ஆறுதல் கூறியதோடு, பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இத்தகவலினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தம்மளை, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

077 248 7228

0777 615 234




நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு

**மாபெரும் அதிரடி மலிவு விற்பனை**

**01.12.2022 தொடக்கம் 31.12.2022 வரை**

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**

ஸ்தாபனத்தில்





சாறி
கவுன்
சோலிகிட் } 50%

பஞ்சாபி 35%

லேகங்கா 25%

மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

நாடவேண்டிய இடம்:

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

44.42 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.